**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of
Communal Clash Cases in Southern Districts
Madurai.

Calender : **SC.No. 03/2009**

Miscellaneous :

Preliminary Register :

Sessions :

Deposition of witness for **Prosecution** அ**.**சா**.17**
**Defence**
**Court**

**Name** **:** சாகுல்ஹமீது

Father's/Husband Name :அசன்கனி

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 28.12.2022

**முதல் விசாரணை**:

நான் தற்போது தென்காசியில் குடியிருக்கிறேன். நான் எல்ஆர்எஸ்பாளையத்தில் டீக்கடை வைத்து நடத்தி வருகிறேன். என் அண்ணன் பெயர் செய்யதுஅப்பா,அவர் மகன் பெயர் அசன்கனி ஆகும். 2007 ம் ஆண்டு ஏற்பட்ட கலவரத்தில் அசன்கனி இறந்துபோனார்.

அலாவுதீனை தெரியாது. ஆஜர் எதிரிகளை தெரியாது. குமார் பாண்டியன்



கொலை செய்யப்பட்ட விபரம் கேள்விப்பட்டேன். எனக்கும் என் அண்ணனுக்கும் 2004 ம் ஆண்டில் இருந்தே குடும்ப பிரச்சனை இருந்துவந்ததால் காவல் துறையில் புகார் கொடுதது பிரச்சனை இருந்துவந்தது. அதனால் அவர்கள் குடும்பத்தை பற்றி நான் அதிகம் அக்கரை கொள்வதில்லை. அசன்கனி எந்த அமைப்பில் இருந்தார் என்ன செய்துவந்தார் என்று எனக்கு தெரியாது. நான் மருத்துவமனைக்கு சென்று என் அண்ணன் மகன் அசன்கனி இறந்ததை பார்த்தேன். வேறுசிலரும் இறந்ததாக கேள்விப்பட்டேன். அசன்கனியின் பிரேதத்தை ஆய்வாளருக்கு நான் அடையாளம் காட்டினேன்.போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**